‘திராவிட மாடல்’ கொள்கை வென்றிட

வாழ்த்துங்கள் அண்ணனே!

எங்கள் உயிரே... உயிர் மூச்சே... அறிவே... ஆற்றலே... தமிழ் ஊற்றே... பெரியாரின் தளபதியே.. தமிழினத் தலைவரே....

தம்பி வா... தலைமையேற்க .. வா... என அழைத்தவரே..... எண்ணற்ற தம்பிமார்களை பதவிகளில் அமர வைத்து அழகு பார்த்த திராவிடக் கண்ணனே... எங்கள் அண்ணனே! உங்களின் மறைவு நாளாக இந்த நாள் நினைக்கப்படுகிறது. நானோ நான் உங்கள் கொள்கைகள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை நீங்கள் வாழ்கிறீர்கள் என்பதாக நம்புகிறேன்.

இன்று நம் முதல்வர் சொல்லுகின்ற திராவிட மாடல் இந்தியா முழுவதும் பேசப்படுகிறது. அன்று நீங்கள் திராவிடம் பேசியபோது உங்களை பிரிவினைவாதி என்றார்கள். அந்தக் கொள்கையை கைவிடவில்லை என்றால் ஜெயிலில் அடைப்போம் என்று மிரட்டினார்கள். ஆனால் கடந்த 75 ஆண்டுகளாக உங்கள் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. இன்று நம் முதல்வர் திராவிட மாடல். ஆட்சியை நடத்துவதோடு. இதுதான் ஒன்றியத்தில் இருக்கும் சனாதன சன்மார்க்க அரசியலுக்கு மாற்று என்று சொல்லி ஒன்றிய அரசின் வயிற்றிலே புளியை கரைத்து விட்டிருக்கிறார்.

இதனால் ஒன்றிய அரசு ஆட்டம் காணுகிறது. அச்சப்படவும் செய்கிறது. ஒன்றிய அரசு இன்று நான் முதல் எதிரியாக கழகத்தையே கருதுகிறது. எதிர் வரப்போகும் மாநில தேர்தலில் கழகத்தையும் நமது முதல்வரையும் தோற்கடிப்பதையே தன் முதல் பணியாக எண்ணி பணியாற்றி வருகிறது.



அண்ணனே....! உங்கள் தலைவர் பெரியாரும். உங்கள் பிரியத்துக்குரிய தொண்டரான கலைஞரும். உங்கள் இதயக்கனியான எம்.ஜி.ஆர். அவர்களும் ஆசிகள் வழங்கிட தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திராவிட மாடல் இந்தியாவின் மாற்று கொள்கையாக தாங்கி பிடித்திருப்பதை வாழ்த்தி.... அந்தக் கொள்கை வென்றிட வாழ்த்துங்கள் அண்ணனே!...

வி.சி.குகநாதன்
திரைப்பட
இயக்குநர்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும் முதல்வருக்கு

விழுப்புரம் மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

விழுப்புரம், பிப்.4-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சிப்காட் மருந்தியல் பூங்கா அருகில் நடைபெறும் அரசு விழாவில் 10,000 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க வருகை தரும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு. க .ஸ்டாலின் அவர்களுக்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (4.2.2026-புதன் கிழமை) காலை 10 மணிக்கு திண்டிவனம் அடுத்த சிப்காட் மருந்தியல் பூங்கா அருகில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று உங்களுடன் ஸ்டாலின் திட்டம் பத்தாயிரம் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட முதியோர் ஓய்வூதிய திட்டத்தினை தொடங்கி வைத்து பத்தாயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வருகை தரும்கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்களுக்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், தி.மு.க. மூத்த நிர்வாகிகள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில்

மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம்!

மீனவர் நல வாரியத் தலைவர் அ. ஜோசப் ஸ்டாலின் சிறப்புரை!

விழுப்புரம், பிப்.4-

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கையை அதிகரித்து, அதன் மூலம் மீன்பிடித் தொழில் மற்றும் அது சார்ந்த உப தொழில்களில் ஈடுபடுவோரின் வாழ்வாதார மேம்பாட்டை உறுதி செய்ய வேண்டும் என கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு அங்கமாக விழுப்புரம் மாவட்டத்தில் கோட்டக்குப்பம் சரகம், அனிச்சங்குப்பம் ஆகிய இடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற மீனவர் நாவலரியத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாமில் மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் பங்கேற்று உறுப்பினர் அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக மீனவர் அணி செயலாளரும், மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் பேசியதாவது,

விழுப்புரம் மாவட்டத்திற்கு கடந்த 5 ஆண்டுகாலத்தில் கழக அரசு ஏராளமான திட்டங்களைத் தந்துள்ளது. இங்குள்ள செட்டிநகர், முதலியார்குப்பம், அனிச்ச ங்குப்பம், புதுக்குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் பிடி இறங்குதளங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மண்டவாய் புதுக்குப்பம் மீனவ கிராமத்தில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காலமாற்றத்தை தாங்கும் மீனவ கிராமமாக மேம்படுத்திட திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எக்கியார்குப்பம், அனுமந்தைகுப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் 3 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதள உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிள்ளைச்சாவடி மீனவ கிராமத்தில் கடலரிப்பினை தடுத்திட நேர்கல் சுவர் மற்றும் மீன்பிடி இறங்குதளம் அமைக்கும் பணிகள் 14 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடந்து வருகிறது. சின்னமுதலியார்சாவடி, மீனவ கிராமத்தில் 11 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகளுக்கு கழக ஆட்சியில் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளன. இதேபோல், அழகன் குப்பம், வசவன் குப்பம், முட்டுக்காடு கைப்பாணிக் குப்பம் ஆகிய மீனவ கிராமங்களுக்கு 2 கோடியே 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, வலைபின்னும் கூடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கழக ஆட்சியில் தான் மீன்பிடித் தடைக்கால நிவாரணம், தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களால் 5000 ரூபாயில் இருந்து, 8000 ரூபாயாக உயர்த்தப்பட்டது! இதில் விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் மட்டும் 3799 பயனாளிகளுக்கு 303.92 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

நலவாரியத்தில் இருக்கும் உறுப்பினரின் மரணம், விபத்து போன்ற காலங்களில் நிவாரண உதவி, நலவாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவி, திருமண நிதி உதவி என ஏராளமான திட்டங்கள் நலவாரியத்தில் உள்ளன. அதுகுறித்தெல்லாம் தெரிந்துகொண்டு நீங்கள் பயன்பெற வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் நலவாரியத்தில் 12730 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கழக ஆட்சியில் விழுப்புரம் மாவட்டத்தில் நலவாரியத்தின் மூலம் இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்தில் உடல் குறைபாடு, ஈமச்சடங்கு, கல்வி நிதி, திருமண உதவித் தொகை என 203 பயனாளிகளுக்கு, 60 லட்சத்து 64,400 ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் மீனவர் விபத்து குழு காப்புறுதித் திட்டத்தின் கீழ், 13 பயனாளிகளுக்கு 62 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

இப்படி மீனவர்களுக்கு ஏராளமான திட்டங்களையும், தேவைப்படும் அனைத்து உதவிகள், நிவாரணங்களையும் நம் திராவிட மாடல் அரசின் வழியே, கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் தந்துள்ளார். வரும் சட்டமன்றத் தேர்தலில் மீனவர்களை கண்ணின் இமைபோல் காக்கும் நம் முதல்வர் அவர்களின், திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும். மொத்தத்தில் எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல். இந்த திராவிட மாடல் நல்லாட்சிக்கு மீனவர்களின் வாழ்வாதார மேம்பாடே சாட்சி!”

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், மீனவர் அணி நிர்வாகிகள், மீன்வளத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

மறைந்தாரு(ளு)ம் அண்ணா; மனமாரும் அண்ணா!

தொண்டைநாடு
சான்றோர்கள்
தோன்றுமிடம் என்கின்ற
பண்டைமொழி மெய்யாகப்
பாலாற்றுக் காஞ்சியிலே
கண்கவர் பட்டுநெய்யும்
கைத்தறிக் குடும்பத்தில்
மண்குளிர, பெற்றவர்
மனங்குளிரப் பிறந்தவர்
அண்ணா,நீர் இளமைமுதல்
அறிவாகத் திகழ்ந்தவர்,
கண்ணாகப் போற்றிடும்
கல்வியிற் சிறந்தவர்,
விண்புகழ் பெற்றாலும்
விருப்பங்கள் துறந்தவர்!
வெண்ணிலவுக் குளிர்ச்சியும்
விரிகதிர் மிளிர்ச்சியும்
பண்ணுலவும் இனிமையும்
பண்பாக வளர்ந்தவர்!
கண்ணறப் பேசியும்
கருத்தொளிர எழுதியும்
மண்ணதிர வைத்தவர்
மடமையை வதைத்தவர்
வெண்தாடிப் பெரியார்பின்
அறிவேந்தி விரைந்தவர்
கண்ணாடி போலமனம்
களங்கமற்றுத் துலங்கியவர்
நுண்ணோக்குக்
கொண்டவர்
நோயுற்ற சமுதாயப்
புண்ணாற்ற வந்தவர்
பொருகலன் தந்தவர்
மண்ணாற்ற முடியாமல்
மறைந்துவிட்ட பேரறிஞர்
அண்ணாவின் நினைவுநாள்
ஆழ்மனத்தில் உறைகின்ற
எண்ணூறும் நினைவுகள்
எத்தனையோ நிகழ்வுகள்
அண்ணாவை மறக்குமோ?
ஆதவன் இறக்குமோ?

அண்ணா,நீர் பிறந்ததனால்
அல்லவோ தமிழர்கள்
கண்ணிருந்தும் குருடராய்க்
காதிருந்தும் செவிடராய்
உண்கின்ற வாயிருந்தும்
உரையாத ஊமையராய்
மண்ணாகக் கிடந்தவர்கள்
மடமையில் வளர்ந்தவர்கள்
உண்மையை
உணர்வதற்கும்
உரிமையைப் பெறுவதற்கும்
எண்ணத்தைத் தூண்டியே
எழுச்சியை மீட்டியே
வண்ணத்தை
அறியவைத்தீர்
வண்டமிழ் போற்றவைத்தீர்
திண்மையை ஊட்டிவிட்டீர்
திராவிடம் காட்டிநின்றீர்
பெண்ணடிமை
போகவைத்தீர்
பேச்சுரிமை காத்துநின்றீர்
மண்ணுரிமை மீட்பதற்கு
மாபெரும் இயக்கமொன்றை
எண்ணியே தோற்றுவித்தீர்
இன்றுவரை ஆளவைத்தீர்!

ஊர்ஊராய்ச் சென்றுநீர்
ஓயாமல் பேசியதால்
நீர்ஊறும் காவிரிபோல்
நிறையவே எழுதியதால்
வேர்உற ஆழமாய்
விண்ணுற இயக்கத்தைச்
சீர்ஊரும் தன்மானம்
சீர்திருத்தம் பகுத்தறிவு
கார்ஊரும் வானம்போல்
கதிர்ஊறும் ஒளியைப்போல்
பார்உறக் காட்டியதால்
பன்மடங்கு நீட்டியதால்

தேர்ஊரும் அழகுமிகு
திருவாரூர்க் கலைஞரும்
பாராளும் உரிமைபெற்றார்
பார்போற்றும் திறமையுற்றார்!
நீர்ஆண்ட இடத்திருந்து
நீண்டபல திட்டங்கள்
ஊர்போற்றத் தளபதி
உருவாக்கி முடிக்கின்றார்
யார்எனினும் எவர்எனினும்
யாதெனினும் அண்ணா,உம்
பேர்சொன்னால் அன்றிஒரு
பெருவெற்றி ஏதிங்கே?

ஆயிரம் ஆண்டுக்கோர்
அருந்தமிழ் செய்தவத்தால்
ஞாயிறுபோல் பிறந்தவர்,
நானிலத்தில் சிறந்தவர்
ஞாயிறு சின்னமென
நன்றாகத் தேர்ந்தவர்
தாயினும் கனிந்தவர்
தன்னலம் முனிந்தவர்
கோயிலும் கடவுளும்
கும்பிடா திருந்தவர்!

சேயினும் திறந்தவுள்ளம்
செந்தமிழ் சிறந்துதுள்ளும்
தூயவர்,கழகத்தின்
தொண்டருளம் வாழ்பவர்
மாயவர்,பேச்செழுத்தால்
மயக்கித்தான் விட்டவர்;
தீயவர் ஆனாலும்
திருந்தித்தான் வாழ்வதற்கு
ஆயவழி செய்தவர்
அன்புநீர் பெய்தவர்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

நோயிலே வீழ்ந்திங்கு
நூறாண்டு வாழாமல்
காயிலே உதிர்ந்துவிட்டீர்!
கண்ணீரை ஓடவிட்டீர்,
தாயிலாக் குழந்தையாகத்
தமிழ்நாடு தவிக்கவிட்டீர்
மாயினும் எங்களுளம்
மறையாத மன்னவரே,
போயினும் ஆண்டுபல
பொலிகின்றீர் நெஞ்சங்கள்
ஆயினும் அண்ணா,நீர்
ஆதவன் அல்லவோ?
ஆயிரம் குயில்களின்
அருங்குரலால் சொல்லவோ?

வடபுலம் ஆளுவோர்
வலம்வந்தே எதிர்த்தாலும்
முடவர்கள் என்பது
முடிவிலே தெரிந்துவிடும்!
குடமாக இருப்பவர்கள்
குன்றான நமையெதிர்க்க
அடமாக முயன்றாலும்
அங்குலம் நகராமல்
திடமாக இருப்பவர்கள்
திராவிடத் தமிழரெலாம்
புடம்போட்ட தங்கங்கள்
புவியாளும் சிங்கங்கள்!

கடமையுடன் கண்ணியம்
கட்டுப்பா டெனமூன்றும்
தடமாகக் கொண்டவர்கள்
தலைநிமிர்ந்தே
வெல்பவர்கள்!
உடன்பட்டால் ஏற்றிடுவர்
உயர்வாகப் போற்றிடுவர்
இடர்தந்தால் ஒழித்திடுவர்
இல்லாமல் அழித்திடுவர்!
மடம்பட்டுப் பேசிய
மன்னர்கள் கனகவிசய்
பிடிபட்டுக் கல்சுமந்தார்
பேடிகள் பல்லுடைந்தார்
இடிபட்டுப் பலரிங்கே
இல்லாமற் போனதெல்லாம்
பொடிபோடும் அண்ணாநீர்
புகன்றவை மறப்போமா;
நெடியாக எப்போதும்
நெஞ்சில்வைத் திருப்போமே!

ஆட்சியில் நீர்இருந்த
ஆண்டுகள் இரண்டெனினும்
காட்சிக்கோ எளியராய்,
கனிவிலே இனியராய்
மாட்சியுடன் ஆண்டீரே
மாநிலத் தன்னாட்சி
மீட்சிக்குக் குரல்கொடுத்தீர்
மீண்டால்தான் மாநிலங்கள்
ஆட்சிசெய முடியுமென்றீர்
இல்லையேல் அதிகாரம்
நீட்சிபெறும் தில்லியிலே
நிலைமைகெடும்
இங்கென்றீர்
சாட்சியின்று தமிழ்நாடு
சங்கிலியில் பிணைப்புண்டு!

ஒருமொழிவைத் துலகாண்ட
ஒருகாலத் தமிழ்நாட்டில்
இருமொழிக் கொள்கையே
இயங்குமெனச் சட்டமிட்டீர்
தெருமொழியாம் இந்தியைத்
திணித்திங்கே
மும்மொழியாய்
வருவதைத் தமிழ்நாடு
வழிமறித்துத் திருப்புமென்றீர்
திருப்பெயராம் தமிழ்நாடு
திகழவும் செய்திட்டீர்
குருக்களில்லாச் சீர்திருத்தக்
கொள்கைமணம்
செல்லுமென்றீர்!
இருந்திருந்தால் நீர்இன்னும்
இமயமும் தாழ்ந்திட
அருஞ்செயல் எத்தனையோ
ஆற்றித்தான் இருப்பீரே!
தருக்கர்கள் இடர்களைத்
தடுத்திங்கே தளபதி
பொருகின்றார் தங்கள்வழி
போகின்றார்;
வெல்வதுண்மை!

மக்களெலாம் உமைக்காண
மாபெருங் கடலாகத்
திக்கெட்டும் குலுங்கிடத்
திரண்டெங்கும் திணறினரே!
துக்கத்தில் மூழ்கினரே
துயர்வெள்ளம் ஆழ்ந்தனரே!
பக்கமெலாம் எழும்ஓலம்
பாரீரோ,அண்ணா,யாம்
திக்கின்றிப் போனோமே
திரும்பித்தான் வாரீரோ?

அக்காலன் குருடனாய்
ஆனானோ?பேரறிவு
மிக்க உமை ஏனிங்கு
விழைந்தானோ?
அவனுந்தான்
இக்கூட்டம் காண்கையில்
இரங்கித்தான் அழுவானே!
தக்க உமைக் கவர்ந்ததொரு
தவறென விழுவானே!
இக்கணம் வரையிலும்
இப்படியோர் துயர்வலம்
துக்கத்தால் எழுந்த
தில்லை;
தொடர்ந்தின்றும்
அழுவதில்லை!

இயற்கைதான் தமிழருக்கு
இழைத்துவிட்ட
பெருங்கொடுமை
துயரினும் துயராகும்
தொடர்ந்தெழும்
அலையாகும்!
புயலாகச் சுழன்றடித்துப்
போக்கிவிட்ட அண்ணாவின்
உயிரெங்கே சென்றதென
உலகெலாம் தேடிவரத்
துயின்றிட அண்ணாநீர்
தொட்ட இடம் கடலோரம்!
வயிற்றினும் வாயினும்
வையந்தான் அடித்தழும்!
பயிற்றிட மேன்மேலும்
படிக்கத்தான் போனீரோ?
உயிர்த்திட வருவீரோ?
உணர்வுகள் தருவீரோ!